# நடப்பு நிகழ்வுகள்- ஏப்ரல் 05 - 2018

- **தேசிய கடல்சார் தினம்** (National Maritime Day 2018) - **ஏப்ரல் 5.** இந்தியாவின் முதல் நீராவிக் கப்பல் SS Loyalty, 1919 ஏப்ரல் 5-ம் தேதி மும்பையில் இருந்து லண்டனுக்கு பயணித்தது. இதை நினைவு கூறும் வகையில் 1964 ஆம் ஆண்டு முதல் ஏப்ரல் 5ம் தேதி தேசிய கடல்சார் தினம் கொண்டாடப்படுகிறது.

- 12-ம் வகுப்பு 10-ம் வகுப்பு CBSE- யின் தேர்வு நடத்தும் முறைகளை ஆய்வு செய்ய மத்திய அரசு VS ஓபராய் உயர்நிலைக் குழுவை அமைத்துள்ளது.

- தி.மு.க முன்னால் அமைச்சர் செ.மாதவன் (வயது 85) உடல் நல குறைவால் சிவகங்கை மாவட்டம் சிங்கம் புணரியில் ஏப்ரல் 36 அன்று காலமானார். இவர் பேரறிஞர் அண்ணா, கருணாநிதி அமைச்சரவையில் அமைச்சராக இருந்தவர்.

- தேசிய மென்பொருள் மற்றும் சேவை நிறுவனங்கள் சங்கத்தின் (National Association of Software and Service Companies – NASSCOM) தலைவராக தேப்ஜானி கோஷ் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவர் இன்டெல் இந்தியா மற்றும் தகவல் தொழில் நுட்பத்திற்கான தயாரிப்பாளர் சங்கம் (MAIT) ஆகியவற்றிற்கு தலைமை வகித்த முதல் பெண்மணியாவார்.

- ஏப்ரல் 6,7 தேதிகளில் கேரள மாநிலத்தின் தலைநகரான திருவணந்த புரம் அருகே கோவளத்தில் "Huddle Kerala" என்ற ஆசியாவின் மாபெரும் தொடக்கநிலை சூழல் மண்டல மாநாடு நடைபெறவுள்ளது.

- ரிசர்வ் வங்கி ஆளுநர் உர்ஜித் பட்டேல் தலைமையில் நடைபெற்ற ரிசர்வ் வங்கியின் நாணய கொள்கைக் கூட்டம் டெல்லியில் நடைபெற்றது. வங்கிகளுக்கான குறுகிய கால கடன் வட்டி விகிதம், ரெப்கோ வட்டி விகிதம் 6 சதவீதமாக தொடரும் என்றும் ரிவர்ஸ் ரெப்கோ வட்டி விகிதம் 5.75 சதவீதமாக தொடரும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

OXFORD IAS ACADEMY

- அணிசேரா அமைப்பு நாடுகளின் அமைச்சர்கள் நிலையிலான மாநாட்டை அசர்பைஜான் (Azerbaijan) நாடு நடத்துகிறது. "நீடித்த வளர்ச்சிக்காக சர்வதேச அளவில் அமைதி மற்றும் பாதுகாப்பை ஊக்குவித்தல்" எனும் கருப்பொருளுடன் ஏப்ரல் 5-6 தேதிகளில் நடைபெறுகிறது. இம்மாநாட்டில் கலந்துகொள்வதற்காக சுஷ்மா சுவராஜ் பக்கூ நகரத்திற்கு சென்றுள்ளார்.

- சிங்கப்பூரில் தமிழ் மொழி திருவிழா 2018 மார்ச் 31 முதல் ஏப்ரல் 29-ம் தேதி வரை நடைபெறுகிறது. சிங்கப்பூரின் 4 அதிகாரப்பூர்வ மொழிகளில் தமிழ் ஒன்று. அந்த நாட்டில் தமிழ் செழித்தோங்க அரசு ஆதரவுடன் 2000-மாவது ஆண்டில் "தமிழ் மொழி கவுன்சில்" தொடங்கப்பட்டது. 2007 முதல் ஆண்டுதோறும் ஏப்ரல் மாதம் முழுவதும் தமிழ் மொழி திருவிழா நடத்தப்படுகிறது.

- இந்திய இராணுவம் மற்றும் எச்.டி.எ.ஃ.ப்.சி.வங்கி (HDFC Bank) இடையே பாதுகாப்புத்துறை, சம்பளப்பிரிவு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏப்ரல் 3-அன்று கையெழுத்தாகியுள்ளது.

- இந்தஸ்சிந்த் வங்கி (IndusInd Bank), WHATSAPP செயலி மூலம் வாடிக்கையாளர்களுக்கு அடிப்படை வங்கி சேவைகளை வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- இமாச்சல் பிரதேச மாநிலத்தில் மார்ச் 4, 2018 அன்று MAA திட்டம் என்ற (MAA programme) முழுமையான தாய்பால் ஊக்குவிப்புத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. MAA programme: Mother's Absolute Affection.

- இந்திய பேட்மிண்டன் சங்கத் தலைவராக (BAI) இமாந்தா பிஸ்வா சர்மா தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவர் அசாம் மாநிலத்தின் சுகாதார மற்றும் கல்வி அமைச்சராக உள்ளார். பொதுச்செயலாளராக அஜய் குமார் சிங்கானியாவும் தேர்வு செய்யப்பட்டுள்ளார். பொருளாளராக மத்திய சுகாதார அமைச்சர் அன்புமனி ராமதாஸ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். BAI: Badminton Association of India.

OXFORD IAS ACADEMY